**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**
**ந.க..எண்.929/ஆ5/2025, நாள்.02/06/2025**

.....

பொருள் பள்ளிக் கல்வி – தமிழ்நாடு காலநிலை மாற்றம் இயக்ககம் (Tamil Nadu Climate Change Mission) – சுற்றுச் சூழல் மன்ற செயல்பாடுகள் (ECO Clubs) உலக சுற்றுச்சூழல் தினம் 05.06.2025 அன்று அனைத்து பள்ளிகளிலும் கொண்டாடுதல் – உரிய அறிவுரைகள் – வழங்குதல் – சார்ந்து

பார்வை சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.32844/எம்1/இ1/2025, நாள். 02.06.2025

.....

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க, ஒவ்வொரு ஆண்டும் ஜுன் மாதம் 5ஆம் நாள் உலக சுற்றுச் சூழல் தினமாக கடைப்பிடிக்கப்பட்டுவருகிறது. ஐக்கிய நாடுகள் சபையினால், இந்த ஆண்டிற்கான முக்கிய குறிக்கோளாக நெகிழி மாசுபாட்டை ஒழிப்போம் (Ending Plastic Pollution) தெரிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, பள்ளிகளில் பின்வரும் செயல்பாடுகளை செயல்படுத்திட பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்திட மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு (இடைநிலை/தொடக்கக் கல்வி/தனியார் பள்ளிகள்) தெரிவிக்கப்படுகிறது.

1. மரக்கன்று நடுதல் மற்றும் பள்ளி வளாக பசுமை செயல்பாடுகள் (Tree Plantation and Campus Greening Activities)
2. ஓவியம் மற்றும் கட்டுரைப் போட்டிகள் (Drawing or Essay Competitions on Environment – related Themes)
   
   தலைப்பு – பிளாஸ்டிக் மாசுபாட்டை ஒழிப்போம், கழிவு மேலாண்மை மாசுபாடற்ற மறுசுழற்சி கிராமம் உருவாக்குதல்.
3. விழிப்புணர்வு பேரணி, பள்ளி வளாக சூழல் நடைப்பயணம் ( awareness Rallies, Nature Walks)
4. உள்ளாட்சி அமைப்புகளோடு இணைந்த தூய்மைப் பணிகள். (Clean Up Activities)
5. அரசுக் கல்லூரி பேராசிரியர்கள், வேளாண் துறைச் சார்ந்த அலுவலர்கள், வனத்துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்களில் சிறந்த வல்லுநர்கள் அழைத்து கருத்தரங்கம் நடத்துதல், (Organizing Talks or Guest Lectures on Biodiversity and Climate Change)
6. பசுமை உறுதிமொழி (Eco – pledge)
   
   மேற்காணும் செயல்பாடுகளுடன் பசுமை உறுதிமொழி இணைத்து அனுப்பப்படுகிறது. இச்செயல்பாடுகளை மகிழ்முற்றக் குழுக்கள் வாரியாக பிரித்து வழங்கி செயல்படுத்திட தெரிவிக்கப்படுகிறது. மேலும். Geo Tag புகைப்படங்கள் எடுத்து இணைப்பில் உள்ள படிவத்தில் இணைத்து tnworldenvironmentday@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தவறாமல் 06.06.2025–க்குள் அனுப்பிடவும் ECO CLUBS என்ற இணைய தளத்தில் பதிவு செய்திடவும் தெரிவிக்கப்படுகிறது.

சுற்றுச் சூழல் பொறுப்பு ஆசிரியர்கள் தங்கள் பள்ளிகளில் நடைபெறும் சுற்றுச்சூழல் மன்ற செயல்பாடுகளை Jio Tag Photo எடுத்து வேலூர் மாவட்ட சுற்றுச் சூழல் ஒருங்கிணைப்பாளர் (Whatsapp No. 9790496224) மற்றும் பசுமைபடை ஒருங்கிணைப்பாளர் Whatsapp எண்ணிற்கு (Whatsapp No. 9443800709) புகைப்படங்களை அனுப்பிவைக்க தெரிவிக்கப்படுகிறது. எவ்வளவு மரக்கன்றுகள் நடப்பட்டன என்பதனை இணைக்கப்பட்டுள்ள Google Sheet-இல் பதிவு செய்ய அனைத்து வகை அரசு / அரசு உதவிபெறும் மேல்நிலை/ உயர்நிலை/ நடுநிலை / தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்குமாறு மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை/தொடக்கக் கல்வி/தனியார் பள்ளிகள்) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், வேலூர் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் (Eco Co-ordinators) மாவட்ட பசுமைபடை ஒருங்கிணைப்பார் (NGC Co-ordinators) மாவட்ட ஒருங்கிணைப்பார் (District Co-ordinators ECO And Youth Clubs (SSA)) ஆகியோர் இப்பணிகளை கண்காணித்து உரிய விவரங்களை மேலே தெரிவித்துள்ளவாறு அனுப்பிவைத்திட தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு -

1. online google sheet link -
https://docs.google.com/spreadsheets/d/1FHkNjWGSwB7rlgaOcnGOttPZq_B7rkpW/edit?usp=sharing&ouid=109116692137954752089&rtpof=true&sd=true
2. பசுமை உறுதி மொழி
3. படிவம்

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர் -

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி),
   வேலூர் மாவட்டம்.
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
2. அனைத்து வகை அரசு / அரசு உதவிபெறும் மேல்நிலை/ உயர்நிலை/ நடுநிலை /தொடக்கப் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகள்,
   வேலூர் மாவட்டம்.

நகல்-

1. முனைவர் திரு சீ. முரளீதர்,
   தேசிய பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர், வேலூர் மாவட்டம்.
2. திரு க. ஜெகதீசன்,
   சுற்றுச் சூழல் ஒருங்கிணைப்பாளர், வேலூர் மாவட்டம்.

# பசுமை உறுதிமொழி

நான்,

மரக்கன்றுகளை நட்டு பராமரிப்பேன்.

காடுகள் மற்றும் பல்லுயிர்த்தன்மையை பாதுகாப்பேன்

நீர், நிலம், காற்று மாசுபடுவதை தடுப்பேன்

பிளாஸ்டிக் பையை பயன்படுத்த மாட்டேன்

புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களுக்கு முன்னுரிமையளிப்பேன்

குப்பைகளை பொது இடங்களில் போட மாட்டேன்

மின்சாரத்தை சேமிப்பேன்

எரிபொருள் வாகன பயன்பாட்டை குறைப்பேன்

தண்ணீரை வீணாக்க மாட்டேன்

சுற்றுச்சூழல் மீது அக்கறையுடன் இருப்பேன்

என இந்நாளில் நான் உறுதி எடுக்கிறேன்